3rd November 1965]

திருமதி டி. என். அனந்தநாயகி: இதற்கு முன்பு பதிலில், நாட்டில் சில காலனிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், தண்ணீர் இல்லாத பகுதிகளில் ஆரம்பித்ததனால், அகதிகள் அந்த இடத்தை விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். அம்மாதிரி இல்லாமல், ஆரம்பிக்கும்போதே, சரியாகப் பார்த்து, தண்ணீர் இருக்கும் இடங்களில் காலனிகளை ஏற்படுத்திக் கொடுத்து, தொடர்ந்து அங்கு இருக்கிறார்களா, கஷ்டங்கள் இருக்கின்றனவா என்பதை ஆராய அரசாங்கம் முற்படுமா?

கனம் திரு. வெ. ராமையா: லாண்டு காலனிஸேஷன் திட்டம் உருவாக்கி அவர்களுக்கு நிலம் கொடுப்பது மட்டும் அல்லாமல், தண்ணீர் வசதி செய்து கொடுக்கும் முறையிலும் கவனம் செலுத்தப்படுகிறது.

*255 கேள்வி.—திரு. மு. கருணாநிதி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பர்மா அகதிகளுக்கு கடனுதவி அளிக்க வேண்டும் என்று கேட்டு கோரிக்கை ஏதேனும் அரசாங்கத்துக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது இம்மாநில அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

THE HON. SRI V. RAMAIAH: (a) & (b) As a measure of long range relief and rehabilitation a scheme for the grant of business loans to the Indian Nationals returning from Burma to enable them to set up petty business or trades is in operation in this State. The Scheme is administered by the Collectors of the districts concerned. Occasionally, representations are received direct by Government from repatriates containing requests for the grant of loan or for enhancement of loan granted, etc. These representations are dealt with on the merits of each case.

திரு. பி. கே. மூக்கையா தேவர்: பர்மா அகதிகள் வந்தவுடன் அவர்கள் ஏதாவது தொழில் செய்ய வேண்டுமென்றால், அதற்கு முதல் தேவைப்படுகிறது. அந்த முதல் கிடைப்பதில் கஷ்டம் இருக்கிறது. வருகிறவர்கள் தாங்களாகவே ஏதாவது தொழிலுக்கு ஏற்பாடு செய்து கொண்ட பின்னர் தான், அதைப் பார்வையிட்டு அரசாங்கம் கடன் கொடுக்கிறது. கையில் காசு இல்லாததால் தொழில் ஆரம்பிக்க முடிவது இல்லை. ஏதோ கையில் வைத்திருக்கும் பணத்தைச் செலவழித்துத் தொழில் ஆரம்பித்துவிட்டாலும், பணம் வாங்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே. அதுபற்றி திட்டத்தை மாற்றியமைத்து, பர்மாவிலிருந்து வருகிற அகதிகளுக்கு முதலிலேயே நேரடியாகக் கடன் தொகை கிடைக்க வகை செய்யவேண்டும். அகதிகள் என்னும் போதே அவர்களிடம் பணம் இல்லை என்று தெரிகிறது. அவர்களுக்குத் தொழில் ஆரம்பிக்க முதலிலேயே கடனைக் கொடுக்க அரசாங்கம் உத்தேசிக்குமா?

இல்லை திரு. வெ. ராமையா : பணம் கொடுக்கிறபோது மிகவும் ஜாக்கிரதையாகத்தான் அரசாங்கம் கொடுக்கிறது. அவர்கள் வந்த பின்னே அவர்கள் சொல்லக்கூடிய விவரத்தை வைத்துக்கொண்டு, அவர்கள் என்ன தொழில் செய்துகொண்டிருந்ததாகச் சொல்கிறார்களோ, அதைக் கருத்திற்கொண்டு, அதே தொழில் அல்லது அதே வியாபாரத்தை அவர்கள் இங்கே செய்ய முடியும் என்று சொன்னால், அதன்படி கடன் கொடுக்கப்படுகிறது. இரண்டாயிரம் ரூபாய் வரைக்கும் கடன் கொடுக்கப்படுகிறது. கனம் அங்கத்தினர் குறிப்பிட்டதுபோல், அவர்கள் கையில் ஒன்றுமே இல்லாமல் வருவதன் காரணமாக, அவர்கள் எந்தத் தொழில் செய்ய முடியும் என்று அறிந்து, அதன்படி முடிவு செய்து, அனுமதி கொடுக்கப்பட்டு வருகிறது. முதலில் குறிப்பிட்ட ஒரு தொகை கொடுக்கிறார்கள். பிறகு, அவர்கள் இடத்தைத் தேர்ந்தெடுத்து, மற்ற அமைப்புக்களையெல்லாம் செய்துகொண்ட பிறகு, பூரணக் கடனையும் கொடுத்து முடித்துவிடுகிறார்கள்.

Hospitals of the Defunct District Boards

* 256 *Q.*—Sri M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the total number of hospitals taken over from the Defunct District Boards as on 30th September 1964; and

(*b*) the number of hospitals yet to be taken over?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) பழைய மாவட்டக் கழகங்களின் கீழ் நவீன மருத்துவ மனைகள், நாட்டு மருத்துவ மனைகள் இரண்டும் சேர்ந்து 623 மருத்துவ மனைகள் இருந்தன. அவற்றில் 73 மருத்துவ மனைகளை அரசாங்கம் மேற்கொண்டது. எஞ்சிய மருத்துவ மனைகள் இப்போது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களின் கீழ் உள்ளன.

திரு. எம். வி. கரிவேங்கடம் : தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனைகள் அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னரும் கூட, ஒருசில மருத்துவ மனைகளில் டாக்டர்கள் போடப்படாமலும், மருந்துகள் இல்லாமலும் இருக்கின்றனவே, அந்த நிலையைப் போக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள இருக்கிறது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்பொழுது அம்மாதிரி மருத்துவர்கள் இல்லாத குறையோ, மருந்துகள் இல்லாத குறையோ இல்லை என்றுதான் நினைக்கிறேன். அப்படி ஏதாவது தனிப்பட்ட முறையில் இருந்தால், கனம் அங்கத்தினர் அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, மூன்று நான்கு திங்களுக்கு முன்பு இந்த மாவட்டக் கழகத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டு பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தின் கீழ் வந்துள்ள மருத்துவ மனைகளை மீண்டும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் என்ற அளவிற்குச் சுற்றறிக்கை அனுப்பி அதற்கான விவரங்